இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 23-05-2025

# பழனிசாமியை தீர்ப்பு சுடவில்லையா?

பொள்ளாச்சி பாலியல் வழக்கின் தீர்ப்பை தி.மு.க. ஏன் சொந்தம் கொண்டாட வேண்டும் என்று கேட்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. தி.மு.க. இப்பிரச்சினையைக் கையில் எடுக்கவில்லை என்றால், குற்றவாளிகளும் கைதாகி இருக்க மாட்டார்கள், வழக்கும் முறையாக நடந்திருக்காது என்பதை மனச்சாட்சி உள்ள அனைவரும் அறிவார்கள். பழனிசாமியின் அ.தி.மு.க. ஆட்சி இந்த வழக்கை மொத்தமாக மறைக்கப் பார்த்தது.

2019 பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி மூன்று பேரைக் கைது செய்து, வழக்கை முடித்து விட அ.தி.மு.க. ஆட்சி திட்டமிட்டது. "இந்த விவகாரம் பற்றி இதுவரை முதலமைச்சர் பழனிசாமி ஏன் வாயைத் திறக்கவில்லை?" என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மார்ச் 13 ஆம் தேதி அறிக்கை வெளியிட்டார்கள்.

**"கைதானவர்கள் மீது குண்டர் சட்டம் பாய்வதாக அறிவித்த சில மணி நேரத்தில் சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்படுவதாக ஏன் அறிவிக்க வேண்டும். அடுத்த சில மணி நேரத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு ஏன் பரிந்துரை செய்ய வேண்டும்? ஒரே ஒரு எப்.ஐ.ஆர். போட்டுவிட்டு, அவர்கள் மீது குண்டர் சட்டமும் போடுவது, சட்டரீதியாக சில மாதங்கள் கழித்து தப்பிப்பதற்கு அரசே வழிஏற்படுத்தித் தருவது ஆகும். உடனே விரைவு நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்"** என்று தி.மு.க. தலைவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டார்கள்.

தி.மு.க. தலைவர் சொன்னது போலவே, இந்த குற்றவாளிகள் 3.11.2019 அன்று குண்டர் சட்டத்தில் இருந்து விடுவிக்கப்பட்டார்கள். இந்த லட்சணத்தில் தான் வழக்கை நடத்தியது அ.தி.மு.க. ஆட்சி.

குற்றவாளிகளைக் காப்பாற்ற அ.தி.மு.க. ஆட்சி முயற்சிப்பதைக் கண்டித்து மார்ச் 12 ஆம் தேதி பொள்ளாச்சியில் தி.மு.க. மகளிரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மகளிரணி செயலாளர் கனிமொழி கலந்துகொண்டு உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அ.தி.மு.க. அனுமதி தரவில்லை. தடையை மீறி போராட்டம் நடத்தியதாக கனிமொழி உள்ளிட்ட தி.மு.க.வினரை கைது செய்தது அ.தி.மு.க. அரசு.

'பொள்ளாச்சி பாலியல் வன்முறையும் அ.இ.அ.தி.மு.க.வின் அலறலும்' என்ற தலைப்பில் மார்ச் 14 அன்று 'முரசொலி' நாளிதழில் தலையங்கம் தீட்டப்பட்டது. 'இந்த விவகாரத்தில் அரசியல்வாதிகளின் தலையீடு இல்லை' என்று எஸ்.பி.பாண்டியராஜனை வைத்து பேட்டி தர வைத்தார்கள். 'இதில் அ.தி.மு.க. மீது தி.மு.க. பழிபோடுகிறது. இந்த விவகாரத்தையே தி.மு.க. தான் தூண்டுகிறது' என்று அன்றைய துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் பேட்டி கொடுத்தார்.

காவல் துறை வெளியிட்ட முதல் தகவல் அறிக்கையில், பாதிக்கப்பட்ட பெண்களின் பெயர்கள் இருந்தது. இதனைக் கண்டித்து மார்ச் 14 அன்று தி.மு.க. தலைவர் வெளியிட்ட அறிக்கையில், **"இது அப்பட்டமான விதிமீறல் ஆகும். பாதிக்கப்பட்ட பெண்கள் யாரும் இனி புகார் தராமல் இருப்பதற்காக விடப்படும் மறைமுக அச்சுறுத்தல் இது. குற்றவாளிகளைக் காப்பாற்ற தனது கபட நாடகத்தை தொடர்கிறது ஆளும் தரப்பு"** என்று குற்றம் சாட்டினார்.

தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த பொள்ளாச்சி ஜெயராமன், தனது ஆத்திரத்தை தி.மு.க. தலைவர் மீது பாய்ச்சினார். எனவே தி.மு.க. தலைவர் சார்பாக பொள்ளாச்சி ஜெயராமனுக்கு வழக்கறிஞர் நோட்டீஸ் மார்ச் 14 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

மார்ச் 14 அன்று அ.தி.மு.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மாணவ, மாணவியர் போராட்டம் நடத்தினார்கள். அன்றைய தினம் அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியின் இல்லத்தை மகளிர் அமைப்பினர் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள். **'தமிழ்நாட்டுப் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. பழனிசாமியே பதவி விலகு'** என்று அவர்கள் முழக்கமிட்டார்கள். அன்றைய தினம் பொள்ளாச்சியில் அ.தி.மு.க. பிரமுகர் 'பார்' நாகராஜன் (பொள்ளாச்சி 34 ஆவது வார்டு ஜெ.பேரவை கிளைச் செயலாளர்) என்பவரின் 'பார்' பொதுமக்களால் அடித்து நொறுக்கப்பட்டது. இவர்தான் புகார் கொடுத்த பெண்களின் உறவினர்களை தாக்கியவர்.

எஸ்.பி.பாண்டியராஜனை மீண்டும் பேட்டி கொடுக்க வைத்தார் பழனிசாமி. "இந்த சம்பவத்தில் வேறு நபர்களுக்கோ அரசியல் தலையீடோ இல்லை" என்று அவர் பேட்டி அளித்தார்.

மார்ச் 15 அன்று தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. **"உயர்நீதிமன்றக் கண்காணிப்பில் சி.பி.ஐ. விசாரணை தேவை. எந்த வகையிலும் பாலியல் கொடூரக் குற்றவாளிகள் தப்பி விடக் கூடாது"** என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏப்ரல் 4 அன்று பொள்ளாச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இது பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள். **"பழனிசாமி ஆட்சியில் நீதி கிடைக்காது பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அடுத்து அமையும் தி.மு.க. ஆட்சி மூலம் நீதி கிடைக்கும்"** என்று அந்தக் கூட்டத்தில் உறுதி அளித்தார் தி.மு.க. தலைவர்.

**அ.தி.மு.க. ஆட்சியில் அருளானந்தம், ஹரேன்பால், பாபு ஆகியோர் காப்பாற்றப்பட்டார்கள். தொடக்கத்தில் இவர்களை அ.தி.மு.க. ஆட்சி கைது செய்யவில்லை. சி.பி.ஐ. வந்து தான் கைது செய்தது. இவர்களை சி.பி.ஐ. கைது செய்த பிறகு தான் 6.1.2021 அன்று அருளானந்தம் அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்படுகிறார். (பொள்ளாச்சி அ.தி.மு.க. மாணவரணியைச் சேர்ந்தவர் இவர்.) இந்த விவகாரத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த யாரெல்லாம் தொடர்பில் இருந்துள்ளார்கள் என்பதை 'நக்கீரன்' இதழ் (2025 மே 17-20) வெளிப்படுத்தி இருக்கிறது. இதற்குப் பிறகும் வெட்கமில்லாமல் பழனிசாமி அறிக்கைகள் எப்படி விடுகிறார்?**



திருச்சி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு நிர்வாகிகளுடன் குறை நிறைகளை கேட்டு கலந்தாலோசனை செய்தார் நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எல்.ஏ., தியாகராஜன், எம்.எல்.ஏ.க்கள் ஸ்டாலின் குமார், கதிரவன், அவைத்தலைவர் அம்பிகாபதி, தொகுதி பார்வையாளர் ராணி, முருகானந்தம், தமிழ்மாறன், முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் மயில்வாகனன், கனகராஜ், ஐ.டி. விங் கேசவன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சரின் சிந்தனையில் உதித்த சீர்மிகு திட்டம் – மக்களைத் தேடி மருத்துவம்!

# தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – அமெரிக்காவில் நடைபெற்ற மனநல சர்வதேச மாநாட்டில் தலைமை உரை!

லாஸ் ஏஞ்சல்ஸ், மே 23-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 20.05.2025 அன்று அமெரிக்கா - கலிபோர்னியா மாகாணம், லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற மனநல சர்வதேச மாநாட்டில் 'நாள்தோறும் மேற்கொள்ளப்படும் நடைபயிற்சியால், உடல் மற்றும் மனநலத்தில் ஏற்படும் தாக்கம்' குறித்த தலைப்பில் உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

2004-ஆம் ஆண்டு நிகழ்வுற்ற ஒரு மிகப்பெரிய சாலை விபத்தில் கால்மூட்டு நான்கு ஐந்து துண்டுகளாக உடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சையென மூன்று மாதங்களாக படுத்த படுக்கையாக இருக்க வேண்டிய ஒரு எதிர்பாராத சூழ்நிலை எனக்கு நேரிட்டது. நிலைகுலைந்த அத்தகைய ஓர் சூழலில் இனி மேல் தொடர்ந்து தரையில் உட்காரவோ, நடக்கவோ அல்லது ஓடவோ கூடாது என்ற மருத்துவர்களின் அறிவுரை ஒரு பேரிடியாக வந்தாலும் தன்னம்பிக்கையை கைவிடாது ஆறு மாதங்கள் கழிந்த பின்னர் படிப்படியாக யோகா பயிற்சி, மெதுவாக நடத்தல், சிறிய தூரங்கள் ஓடுதல் என முயற்சிக்கத் தொடங்கி ஓட்டப்பயிற்சி அளவிற்கு உயர்ந்து மாரத்தான் பந்தயத்தில் பங்கேற்கும் அளவிற்கு வளர்ச்சி கண்டேன். அதைத் தொடர்ந்து அடுத்த ஐந்து ஆண்டுகளில் 100 மாரத்தான் பந்தயங்களில் பங்கேற்று உலக சாதனையாளர்கள் பட்டியலில் இடம் பெற்றதோடு விடாமுயற்சி மற்றும் சளைக்காத மனவுறுதியுடன் இதுவரை 160 மாரத்தான் போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். வரும் 24.05.2025 அன்று 161-வது மாரத்தான் போட்டி அமெரிக்கா-கலிபோர்னியா மாகாணத்திலுள்ள சன்னிடேல் என்கின்ற இடத்தில் கலந்து கொள்ள உள்ளேன்.

### மாராத்தான் நிதி மக்கள் பணிக்கு

தமிழ்நாடு அரசால் 2020 மற்றும் 2021-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 'கலைஞர் நினைவு பன்னாட்டு மெய்நிகர் மாரத்தான்கள்',



2022-ஆம் வருடம் நடைபெற்ற 'கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான்' மற்றும் 2023-ஆம் ஆண்டு நடைபெற்ற கின்னஸ் உலக சாதனை படைத்த 'கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்' ஆகியவற்றில் முன்னிலை வகுத்து பங்கேற்றதுடன், இந்நிகழ்வுகள் மூலம் கிடைக்கப்பெற்ற பதிவுத் தொகையான ரூபாய் 5.43 கோடியை கொரோனா நோய்த்தடுப்பு நிவாரண நிதி, எழும்பூர் அரசு குழந்தைகள் மற்றும் தாய்சேய் நல மருத்துவமனையில் குழந்தைகளின் பெற்றோர்கள் தங்குவதர்க்கான 4 மாடி கொண்ட உறைவிட கட்டடம் மற்றும் இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான உயர் சிகிச்சைக்கான கட்டடம் போன்ற பல்வேறு உயர் நோக்கங்களுக்காக நன்கொடையாக அளிக்கப்பட்டதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

### மக்களைத் தேடி மருத்துவம் - ஐநா விருது

மேலும், தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதில் எவ்வாறு தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இந்திய அளவில் திகழ்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 05.08.2021-ல் தொடங்கப்பட்ட 'மக்களைத் தேடி மருத்தும் திட்டம்', ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2004-ஆம் ஆண்டிற்கான *United Nation Interagency Task Force Award* பெற்றுள்ளதையும், 'பாதம் பாதுகாப்போம் திட்டம்', 'இதயம் காப்போம் திட்டம்', 'இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும்-48' போன்ற பிற பல்வேறு திட்டங்கள் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

தன்னம்பிக்கை எத்தகைய பலம் வாய்ந்தது என்பதற்கு இலக்கணமாக மயிரிழையில் உயிர்தப்பி இனி முன்பு போல இயங்கவியலாது என்ற நிலையிலிருந்து மனவுறுதி, விடாமுயற்சி மற்றும் தொடர் பயிற்சி காரணமாக மாரத்தான் ஓட்டத்தில் உலக சாதனைகள் புரிந்து இன்று சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்கும், வருங்காலத் தலைமுறையினருக்கும் தினசரி நடைபயிற்சி மற்றும் ஓட்டப்பயிற்சி மூலம் உடல் மற்றும் மனநலம் காக்கப்படுவதை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நல்வாய்ப்பாக இப்பயணம் அமைந்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.

## சென்னை குடிநீர் வாரியம் சார்பில் பராமரிப்புப் பணி!

சென்னை, மே 23-

மண்டலம் - 3 (மாதவரம்) ஜி.என்.டி ரோடு மற்றும் சந்திர பிரபு காலனி சந்திப்பில் 900 மில்லி மீட்டர் விட்டமுள்ள கழிவுநீர் உந்து குழாயில் ஏற்பட்ட உடைப்பை சரி செய்யும் பணிகள் மேற்கொள்வதால் இன்று (23.5.2025) இரவு 10.00 மணி முதல் 24.5.2025 இரவு 10.00 மணி வரை (24 மணி நேரம்) மண்டலம் - 3 (மாதவரம்), மண்டலம் - 6 (திரு.வி.க நகர்) மற்றும் மண்டலம்-7 (அம்பத்தூர்) - க்குட்பட்ட சில பகுதிகளில் கீழ்கண்ட கழிவுநீர் உந்து நிலையங்கள் தற்காலிகமாக செயல்படாது.

வ. எண் - மண்டலம் - பகுதிப் பொறியாளர் - கைபேசி எண்கள் கழிவுநீர் உந்து நிலையங்கள்

மண்டலம்-3 (மாதவரம்) 8144930903 கடப்பா சாலை உயர் மின் அழுத்த தொடர் கழிவுநீர் உந்து நிலையம், மதன குப்பம் உந்து நிலையம், ராஜீவ் காந்தி நகர் உந்து நிலையம், தாங்கல் கரை உந்து நிலையம், புத்தகரம் உந்து நிலையம், பத்மாவதி உந்து நிலையம், வீனஸ் நகர் உந்து நிலையம்.

மண்டலம் - 6 (திரு.வி.க நகர்) 8144930906 வில்லிவாக்கம் செக்டார் 'ஏ' உந்து நிலையம், கொளத்தூர் கழிவுநீர் உந்து நிலையம்.

மண்டலம்-7 (அம்பத்தூர்) 8144930907 கொரட்டூர் உயர் மின் அழுத்த தொடர் கழிவுநீர் உந்து நிலையம், லெனின் உயர் மின் அழுத்த தொடர் கழிவுநீர் உந்து நிலையம், சங்கம் உந்து நிலையம், அய்யப்பாக்கம் உந்து நிலையம், வி.ஒ.சி. நகர் உந்து நிலையம், நேரு நகர் உந்து நிலையம், தென்றல் நகர் உந்து நிலையம், கள்ளிக் குப்பம் உந்து நிலையம், கருப்பன் குளம் உந்து நிலையம், கருக்கு உந்து நிலையம், பள்ளம் உந்து நிலையம், சிட்கோ உந்து நிலையம், கச்சனகுப்பம் உந்து நிலையம், கிழக்கு அவென்யூ உந்து நிலையம், இளங்கோ நகர் உந்து நிலையம்.

எனவே, மாதவரம், திரு.வி.க நகர் மற்றும் அம்பத்தூர் மண்டலங்களுக்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

